# இயற்கை பேரிடர் மேலாண்மை குறித்த தேசிய கருத்தரங்கம்

## சென்னையில் நடைபெற்றது

சென்னை, ஏப். 20 –

இயற்கை பேரழிவுகள் ஏற்படும்போது அதை சமாளிக்கும் நடவடிக்கைகள், மனித ஆற்றல் மற்றும் நிதித் தேவைகள் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பு போன்றவற்றை அலசி ஆராய இயற்கை பேரிடர் மேலாண்மை குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது.

கருத்தரங்கை மாநில நிவாரண பணிகள் ஆணையர் ஆர். சந்தானம் துவக்கி வைத்தார். கருத்தரங்கின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய, 'வாணி' அமைப்பின் தலைவர் ஜெகதானந்தா மற்றும் பூமிகா டிரஸ்டின் ராஜூ ராஜகோபால் ஆகியோர் கூறியதாவது :

பிரச்சனைகளின் திவிரத்தை, ஆழத்தை புரிந்து கொள்ளாவிட்டால் திர்வு என்பது காரணமாகிறது. இயற்கை பேரழிவின்போது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள், புதிய உத்திகள் குறித்து சமீபத்திய சுனாமி நம் கண்களை திறந்துள்ளது.

அரசு மற்றும் அரசு சாராத அமைப்புகளின் ஒருங்கிணைப்பு, இயற்கை பேரிடர் ஏற்பட வாய்ப்பு உள்ள பகுதிகளில் காப்பீட்டுத் திட்டங்களை ஊக்குவிப்பது, தேசிய மாநில அளவிலான நிவாரண நிதிகளில் உள்ள பட்டியல்கள், விதிகள், கொள்கைகள் சீரமைத்தல் போன்ற பல முக்கிய விஷயங்கள் இக்கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டதாக கூறினார்கள்.

செய்தியாளர் சந்திப்பின் போது, காந்திகிராம பல்கலைக்கழக, கிராமப்புற சமூக அறிவியல் பேராசிரியர் டாக்டர் பழனிதுரை எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் ராம்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

**நீதித்துறை நடுவர் எண்-II**
**நீதிமன்றம், பொன்னேரி**
**சி.எம்.பி.எண் 700/2005**

ஷேக் தாவூத், த/பெ. மொய்தீன்கனி
ஜெகந்நாதபுரம் சத்திரம் கிராமம்,
பொன்னேரி வட்டம் மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், பொன்னேரி
எதிர்மனுதாரர்

ஐயா,

மேற்படி மனுதாரர் மேற்படி நீதிமன்றத்தில் மனுதாரர் ஷேக் தாவூத் த/பெ. மொய்தீன் கனி அவர்களின் மகள் எஸ். ஆயிஷா 17.11.1990 அன்று ஜெகந்நாதபுரம் சத்திரம் கிராமம் பொன்னேரி வட்டம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள மனுதாரரின் இல்லத்தில் பிறந்ததை கவனக் குறைவாக சம்பந்தப்பட்ட அலுவலகமான பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் மனுதாரர் விட்டுவிட்டார். ஆகவே மனுதாரரின் மகளின் பிறப்பை தங்களது அலுவலகத்தில் பதிவு செய்து பிறப்பு சான்றிதழ் வழங்குவதற்கு தங்களுக்கு உத்தரவிட மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு 29.04.05 அன்று காலை 10 மணியளவில் விசாரணைக்கு வருகிறது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ தெரிவிக்கலாம். தவறினால் மேற்படி மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

**P. சுப்ரமணியன்**
மனுதாரர் வழக்கறிஞர், பொன்னேரி